www.padippakam.com

# அடிப்படை உரிமைப் பிரச்சனையும் அருவி ஆசிரியரின் கைதும்

03/1893

கொழும்பில் தமிழ் இளைஞர் யுவதிகளைக் கண்மூடித்தனமாகக் கைது செய்கின்ற பொலிசாரின் நடவடிக்கை பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. இதையிட்டு பத்திரிகைகளிலும் பாராளுமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்பட்டு அதற்கான ஏதோ சமாதானங்கள் கூறப்பட்டுமுள்ளன. இந்நிலையில் இவ்வாறான வகையில் கைது செய்யப்பட்டவர்கள் சிலரைச் சந்தித்து அவர்களது அனுபவங்களை எமது சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக அப்படி நிகழ்ந்தவற்றைக் கூறுவதற்கு முன்வரக்கூடியவர்கள் உள்ளார்களா என்று தேடிக் கொண்டிருந்தேன். ஆனால் எனது அதிஷ்டம் - தமிழ் மக்களுக்கு பீடித்த பொதுவான துரதிஷ்டம், நானே கைது செய்யப்பட்டு அந்த "சுவையான" அனுபவத்தை விலாவாரியாக ஊட்டப்பெற்றேன். ஆம்! ஒரு பத்திரிகையாளனாக, பிரதம ஆசிரியராக இருந்தும், பத்திரிகையாளர் பொலிசாரால் தொல்லைப்படுத்தப்படமாட்டார்கள், பொலிசார் யாவரும் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள், என்ற அரசாங்கத்தின் வெளிப்படையான உத்தரவாதத்திற்குப் பின்பும், வேறெந்தக் காரணத்திற்காகவுமல்ல தமிழனென்ற ஒரே காரணத்திற்காக நானும்தான் கைது செய்யப்பட்டேன்.

28.06.1993

இரவு சுமார் 10.30 மணி. நான் சற்று நேரத்திற்கு முன்னர்தான் உணவருந்திவிட்டு அறைக்குத் திரும்பியிருந்தேன். வெளிநாட்டில் இருந்து வந்திருந்த எனது மைத்துனர் ஒருவருடன் கதைத்துக்கொண்டிருந்தேன். திடீரென பொலிசார் உள்ளே நுளைந்தார்கள். இருவரையும் மாறிமாறிக் கேள்வி கேட்டார்கள். பின்னர் எம்மை எமது அடையாள அட்டைகளை எடுத்துக்கொண்டு தம்மோடு புறப்படும்படி சொன்னார்கள். நான் அவ்விடத்தில் அவர்களுக்குச் சொன்னேன் நான் ஒரு பத்திரிகை ஆசிரியர், பொலிசார் பத்திரிகையாளரை தொல்லைப்படுத்தமாட்டார்களென்ற உத்தரவாதம் எமக்குத் தரப்பட்டுள்ளது, முன்னாள் அமைச்சரவைப் பேச்சாளராயிருந்த இன்றைய பிரதமர் ரணில் விக்கிரசிங்கவே அப்படித் தெரிவித்திருந்தார், இது குறித்துப் பொலிசாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியிருந்தார், அதனால் நீங்கள் இவ்வாறு என்னைக் கைது செய்வது தவறு என்று. அத்துடன் எனது அடையாள அட்டை, வேலை அட்டை என்பவற்றையும் காண்பித்தேன். ஆனால் அவர்களோ நான் கூறும் எதையும் காதில் வாங்கிக்கொண்டவர்களாகத் தென்படவில்லை. எம்மிருவரையும் கூட்டிச் சென்று ஜீப்பில் ஏற்றினர். நான் உள்ளே எமக்கு காவலிருந்த பொலிசாருக்கும் அதையே திரும்பச் சொன்னேன். அதை அவர்கள் உதாசீனம் செய்துவிட்டு தங்கள்பாட்டிற்கு இருந்தார்கள். பின்னர் அவ்விடத்திலுள்ள சிங்கள நபரொருவருடன் மீதிப் பொலிசார் ஜீப்பில் ஏறிக்கொள்ள ஜீப் புறப்பட்டது. அந்த நபர் ஒரு ஒழுங்கையுள் இட்டுச் சென்று ஏதோ ஒரு வீட்டை குறிப்பிட்டுவிட்டு முன்னரே இறங்கிக்கொள்ள, பொலிஸ் அந்த வீட்டிலிருந்தும் பல தமிழ் இளைஞர்களையும் பெண்களையும் அழைத்து வந்த ஜீப்பில் ஏற்றினார்கள். பெண்களைக் கைதுசெய்தபோது பெண்பொலீசார் எவரும் வந்திருக்கவில்லை. ஜீப் பொலிஸ் ஸ்ரேஷனை அடைந்ததும் எம்மை அங்கிருந்தவர்களிடம் பொறுப்பளித்துவிட்டு எம்மைக் கூட்டி வந்தவர்கள் போய்விட்டார்கள்.

எம்மில் மொத்தமாக 22பேர் இருந்தோம். அதில் எட்டுப் பேர் பெண்கள். அங்கு இரண்டு கூண்டுகள் இருந்தன. அதற்குள் ஏற்கனவே சிலர் இருந்தார்கள். அக்கூண்டுகளுள் ஆண்களை போகச் சொன்னார்கள். பெண்களை கூண்டுகட்கு வெளியே இருந்த அறையில் வாங்குகளில் இருக்கச் சொன்னார்கள்.

அதன் பின்னர் யாவரையும் முன் அறைக்குச் கூட்டிச்சென்று பெயர் விலாசம் பதிந்தார்கள். எனது முறை வந்தபோது நான் அவர்களுக்குச் சொன்னேன் நான் ஒரு பத்திரிகையாளனென்று தெரிவித்தும்கூட என்னை இங்கு கூட்டிவந்துள்ளார்கள், இப்படிச் செய்வது தவறு என்று. அவர்களோ அதை அசட்டை செய்துவிட்டு பெயர் விலாசம் பதிந்தார்கள். அப்போது நான் அவர்களிடம் கேட்டேன் அப்படியானால் நான் இங்கு ஒரு முறைப்பாடு கொடுக்கிறேன் அதை எழுதிக்கொள்ளுங்கள் என்று. அதற்கு அவர்கள் நாளைக்கு ஒ.ஐ.சி வருவார் அவரிடம் கொடுக்கும்படி கூறினார்கள்.

பின்னர் எம்மை திரும்பவும் அழைத்து வந்து ஆண்களை அவ்விரு கூண்டுகளுக்குள்ளும் பெண்களை அதற்கு வெளியே இருந்த வாங்குகளிலும் விட்டார்கள்.

நான் இருந்த கூண்டு சுமார் 5 அடி அகலமும் 18 அடி நீளமும் கொண்டது. அதற்குள் 5 அடி அகலத்தில் ஒரு குந்து கட்டப்பட்டிருந்தது. உள்ளே ஏற்கனவே நான்கு பேர்



படிப்பகம்

இருந்தார்கள். மூவர் போதைப்பொருள் தொடர்பாகவும் ஒருவர் களவு தொடர்பாகவும் அடைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் என்னோடு சேர்த்து கொண்டுவரப்பட்டவர்கள் ஐவர். மொத்தம் அதற்குள் ஒன்பது பேர். குந்தின்மேல் ஏற்கனவே இருவர் படுத்திருந்தார்கள். கீழே எமக்கு குறுக்குப்பாட்டாகத்தான் படுக்க வேண்டும். இடமில்லை. அப்படிப் படுப்பதற்கும் கால்நீட்ட முடியாது. முடங்கியபடியே படுக்க வேண்டும். சலம் கழிப்பதற்கு மூலையில் சிறிய துளை கொண்ட கட்டு ஒன்று உள்ளது. போதைப்பொருள்காரர் அடிக்கொருதரம் சலம் கழிக்கச் சென்றபடியிருந்தார். கூண்டு முழுவதும் ஒரே துர்நாற்றம் வீசியபடி இருந்தது. இரவு முழுவதும் அவ்வாறே நாம் கழிக்க நேர்ந்தது. பெண்களைப் பொறுத்தவரை மூதாட்டி ஒருவர் அவர்களைக் கவனிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்தார்.

விடிந்ததும் நான் அங்கிருந்த பொலிஸாரிடம் அப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை (ஓ.ஐ.சி.) சந்திக்க வேண்டுமென்று கேட்டேன். அவர் இன்னும் வரவில்லை என்று கூறப்பட்டது. எனது உறவினர்களுக்கு தொலைபேசிமூலம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டேன். மறுக்கப்பட்டது. எனக்கு வெளியால் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ள எந்த வழியும் செய்து தரப்படவில்லை. அங்கு கைதிகளைப் பார்க்க வந்தவர்களிடம் மட்டும் எனக்கு வேண்டியவர்களுக்குத் தகவல் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

சுமார் காலை 8.30 போல் காலைக்கடன் முடிக்க எம்மை வெளியால் அழைத்துச் சென்று வந்தார்கள். அப்போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வந்திருப்பதைக் கண்டு நான் அவரைச் சந்திக்கவேண்டுமென கேட்டேன். அதற்கு மறுத்துவிட்டார்கள். இதேவேளை எம்மோடு அழைத்துவரப்பட்ட மூவர் ஏதோ சிபாரிசின் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் சுமார் 10.30 மணியளவில் எம் எல்லோரையும் அழைத்துச் சென்று கைரேகை பதிந்து வாக்குமூலம் எடுத்தார்கள். நான் மீண்டும் இவ்விடத்தில் அவர்கள் செய்வது தவறென்று கூறினேன். என்னிடம் வாக்குமூலம் பெற்றபோது நான் ஒரு பத்திரிகையாளன் என்று கூறியும்கூட என்னை உங்கள் அமைச்சரின் உத்தரவாதத்திற்கு மாறாக இவ்வாறு கைது செய்து வந்தது சரியா என்று வினாவினேன். அதற்கு அவர், பொதுவாக மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கையில் உங்களையும் கைதுசெய்துள்ளார்கள் என்று காரணம் கூறினார். எனது வாக்குமூலம் சிங்களத்தில் பதியப்பட்டது. மொழி புரியாததால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளதென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

நாம் மீண்டும் பழையபடி கூண்டுகளில் அடைக்கப்பட்டோம். பின்னர் அப்போது நான் சொல்லியனுப்பிய தகவல் ஒருவாறு கிடைக்கப்பெற்று என் உறவினர்கள் வந்து என்னைப் பார்வையிட்டனர். அவர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் பேசியதில் எம்மை சுமார் பி.ப. 1.30மணி போல் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று பிணையில் விடுவிப்பார்கள் என்றும் யாராவது பிணை எடுக்க வரவேண்டுமென்றும் கூறப்பட்டது.

சுமார் 1.00 மணிபோல் எம்மை அழைத்துச் சென்று படம் எடுத்தார்கள். ஆண்களை சேட்டைக் கழற்றி அரை வெற்றுடம்புடன் இலக்கத் தகடுகளை குறுக்காகப் பிடித்து படம் எடுத்தார்கள். பின்னர் யாவரையும் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றார்கள்.

அங்கு ஆண்கைதிகளை ஏற்கனவே வேறு இடங்களிலிருந்து அழைத்து வரப்பட்டிருந் சிங்களக் கைதிகளிருந்த ஒரு கூட்டில் விட்டார்கள். அக்கைதிகளில் சிலர் எம்மை வெருட்டி எமது பைகளைத் துலவி பணம் பறிக்க முற்பட்டார்கள். சிலர் ஏற்கனவே பணம் பறிகொடுத்துவிட்டார்கள். அதைக்கண்டு நாம் கூச்சலிட்டு சிறைக்காவலர்களை அழைத்து முறையிட்டோம். சிறைக்காவலர்கள் உடனே அவர்களை வேறு கூட்டிற்குள் பிரித்து விட்டார்கள். அதற்குள் இருந்த அவர்கள் எம்மை மகர சிறைச்சாலைக்கு வருவீர்களானால் கால்களை ஒடிப்போம் என்று மிரட்டிக்கொண்டிருந்தார்கள். எம்முடன் மீந்திருந்த வேறு சில சிங்களக் கைதிகள் களவாக உள்ளே தருவித்துக்கொண்ட போதைப்பொருட்களை அனுபவிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். இவற்றுக்கு மத்தியில் நாம் சுமார் 4.30 வரை இருந்துவிட்டு பின்னர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோம். அங்கு ஏற்கனவே வந்திருந்த எமது உறவினர்கள் வழக்கறிஞர்கள் மூலம் ஒவ்வொருவருக்கும் தலா 750 ரூபா பிணை செலுத்தி எம்மை பிணையில் விடுவித்தார்கள். எமக்கு ஆடி 6ம் திகதி நீதிமன்றம் வரவேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

6.7.1993 அன்று எமது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எட்டுப் பெண்கள் உட்பட பத்தொன்பது பேரும் பெயர்கள் வாசிக்கப்பட்டு கூண்டில் ஏற்றப்பட்டு எவ்வித விசாரணையும் இன்றி "விடுதலை செய்யப்படுகிறீர்கள்" என்ற ஒரு வார்த்தையுடன் விடுதலை செய்யப்பட்டோம். எமக்கு எதிராக பொலிஸார் கொடுத்திருந்த விளக்கம் விஷேட சுற்றிவளைப்பொன்றில், கொழும்பில் ஏன் நிற்கிறார்கள் என்ற சரியான காரணம்

காட்டாததால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்கள் என்பதே. விடுதலை செய்தபோது "பயங்கரவாதச் செயற்பாட்டுடன் இவர்களுக்கு எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்பதால் விடுதலை செய்யப்படுகிறார்கள்" என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இன்றுவரை சுமார் எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட கொழும்பு வாழ் தமிழ் மக்கள் -ஆண்கள்,பெண்கள்,பலதரப்பட்ட ஊழியர்கள், வயதானவர்கள்,சுகவீனமானவர்கள் என்ற பேதம் ஏதுமின்றி எழுந்தமானமாக கைது செய்யப்பட்டு இவ்வகை அனுபவத்திற்கூடாக சென்றுவந்துள்ளார்கள். இவ் அனுபவம் இவர்களின் குறைந்த பட்ச வேதனை மட்டுமே. பலருக்கு இதைவிட மோசமான அனுபவங்களும் நிகழ்கின்றன. அவர்கள் பல நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம், தாக்கப்பட்டிருக்கலாம், மேலும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கலாம். இவர்கள் திடீரெனக் கைது செய்யப்படுவதனால் எவ்வளவோ முக்கிய, அவசரகாரியங்கள் கைவிடப்பட்டிருக்கலாம். அவற்றின் பாதிப்புகள் சிலசமயம் பாரதூரமானதாகவும் இருக்கலாம். ஒரு வெளிநாட்டுப் பயணம் நின்று போயிருக்கலாம், திருமணம் பிற்போடப்பட்டிருக்கலாம், வேலைக்கான நேர்முகப்பரீட்சை ஒன்று தவறிப்போயிருக்கலாம். இதைவிட இவர்களை மீட்பதற்காக உத்தியோகபூர்வமாக கொடுக்கப்படும் பிணை, மற்றும் செலவீனங்கள் தவிர பன்மடங்கு தொகைப்பணம் வழக்கறிஞர்களுக்கும் சலுகை கருதி பொலிசாருக்கும், அலைந்து திரிவதில் ஓட்டோ, டாக்சி போன்றவற்றிற்கும் தொலைபேசியிற்கும் என்றுவேறு செலவாகிறது.

இப்படியான ஒரு அவல நிலை எந்தக் குற்றத்திற்காக இத் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது? உண்மையில் கொழும்பு வந்துள்ள பெரும்பாலான தமிழ் மக்கள், வடக்கு, கிழக்கில் இருக்கின்ற பாதுகாப்பற்ற கடினமான வாழ் நிலையிலிருந்து தப்பித்துப் புலம் பெயர்ந்தவர்களே. இவர்களை வரவேற்று அபயமளிக்க வேண்டிய ஓர் கடமைப்பாடுடைய அரசாங்கம் இவர்களை அனுதாபக் கண்கொண்டு பார்க்க வேண்டியதற்குப் பதிலாக மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஏன் இவ்வாறு தொல்லைப்படுத்துகிறது?

இப்படி அரசாங்கம் நடத்துவதைப் பார்த்தால் தமிழ் மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகவே அது பார்க்கிறது என்பதைத்தான் உணர முடிகிறது. ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக என்று போடப்பட்ட சட்டங்களும், நடவடிக்கைகளும் எவ்வாறு குறிப்பாக ஒரு இனத்திற்கெதிராக செயல்படுத்தப்படுகிறது என்பதை நாம் இங்கு பார்க்கமுடியும். உதாரணத்திற்கு என்னைக் கைது செய்த சம்பவத்தை எடுத்தால், எனது அறைக்குள் பொலிசார் பிரவேசிக்கும்போது அதற்குள் யார் இருக்கிறார்கள் என்றே அவர்களுக்குத் தெரியாது. எனது பெயர் என்ன? தொழில் என்ன? வயதென்ன? உருவம், நிறம், ஆணா, பெண்ணா, எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. ஆக அவர்களுக்கு தெரிந்த ஒன்று இதற்குள் யாரோ தமிழர் இருக்கிறார்கள் என்பது மட்டும்தான். உள்ளே வந்த பின்னர்தான் உனது பெயர் என்ன? தொழில் என்ன? ஊரென்ன? என்று கேட்கிறார்கள். ஆனால் இவர்கள் என்னைக்கைது செய்ததிற்கு கொடுக்கப்பட்ட சட்டரீதியான விளக்கம் "நியாயமான சந்தேகத்தின் பேரில்"(On reasonable suspicion) என்பதே. ஆக அவர்களுக்கு என்மீது சந்தேகம் எழுந்ததற்கான வலுவான நியாயம் இவன் ஒரு தமிழன் என்பதேதான். ஏனெனில் அது மட்டும்தான் அவர்களிற்கு முன்னமே தெரிந்திருந்தது. கைது செய்யும்போது நான் அவர்கள் கேட்ட சகல கேள்விகளுக்கும் விளக்கமளித்தும், இவர்கள் தமது குற்றப்பத்திரத்தில் குறிப்பிட்டது போல் கொழும்பில் நிற்பதற்கு தகுந்த காரணம் அளிக்க முடியாத ஒருவனாக அல்லாமல் தகுந்த அத்தாட்சிகளை காண்பித்தும்கூட என்னை அழைத்துச் சென்றார்கள். (இவ்வாறு பலருக்கு நிகழ்ந்துள்ளது.) இவற்றிற்கெல்லாம் அவர்களின் பதில் பொலிஸ் ஸ்டேசனிற்கு வந்து சொல் என்பதே ஒழிய அவ்விடத்தில் எதையும் செவிமடுப்பதாக இருக்கவில்லை.

குற்றவாளிகளை இனங்கண்டு தேடிப்பிடிக்க முடியாத அரச பாதுகாப்புப் படைகளின் இயலாமையையும் பலவீனத்தையும் மறைக்க அது மறுதலையாக சகல தமிழ் மக்களையுமே கைது செய்து அவர்களுள்ளிருந்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கலாம் என்ற ஓர் இலகுவான மூடத்தனமான முடிவை எந்த வித சமுதாயப் பொறுப்புமில்லாமல் மேற்கொண்டுள்ளது. இது கடலை இறைத்து மீனைப் பிடிப்பது போன்றதாகும். இவர்கள் ஒருவேளை ஓரிரு பயங்கரவாதிகளை இவ்வகையில் பிடிக்கக்கூடும். ஆனால் இந்த இம்சை ஆத்திரமுற்ற பலரை புதிதாக பயங்கரவாதிகளாக மாற்றத்தான் வழிகோலும். நேரடியாக அவ்வாறு மாறாவிட்டாலும்கூட பயங்கரவாதிகளிற்குச் சாதகமான உளப்பாங்கையே அவர்களை அடைய வைக்கும். இவ்வகை அனுபவத்திற்கு உட்படுகையில் கௌரவமான ஒரு பிரஜை காரணம் எதுவும் கூறப்படாமல் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளுடன் சேர்த்து அடிப்படை வசதிகள் கூட அற்ற ஒரு சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுகையில் அவற்றை இலங்கையின் பாதுகாப்புச் சட்டங்கள் நீ தமிழன்

என்ற காரணத்தால் இந்த அவமானம் உனக்கு உபாக்கியதை உடையதுதான் என்று சொல்வதாக அவன் உணர்கையில், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் சமத்துவமான குடிமக்களுள் ஒருவனாகவா தன்னை உணருவான்?

இன்னுமொரு விடயம். அரசாங்கம் அதன் பொறுப்பு மிக்க அமைச்சர்கள் மூலம் கொடுக்கின்ற உத்தரவாதங்கள் நடைமுறையில் எவ்வாறு உதாசீனப்படுத்தப்படுகின்றன என்பதையும் இங்கு காணமுடியும். தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னர் அமைச்சரவைப் பேச்சாளர் என்ற நிலையில் பத்திரிகையாளருக்குத் தந்த உத்தரவாதம் ஒன்றும் இலகுவாக பெறப்பட்ட ஒன்றல்ல. பத்திரிகையாளரான கேலிச்சித்திர ஓவியர் யூனுஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் முனைப்புப் பெற்ற பத்திரிகையாளர் போராட்டம் பின்னர் வளர்ந்து வலுவடைந்து சென்ற ஒரு கட்டத்தில் வென்றெடுக்கப்பட்ட அவர்களின் உரிமைக்கான ஒரு உத்தவாதமாகும் அது. ஆனால் அந்த உத்தரவாதம் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற வகையில் இப்போது தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற இந்நடவடிக்கையில் தமிழ்ப் பத்திரிகையாளர்களிற்கு மறுக்கப்படுவதை நாம் இங்கு காண்கிறோம். இதேவேளை தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களிற்கு ஏற்பட்டுள்ள இவ் இன்னல்கள் குறித்து எடுத்துரைத்தபோது அவர்களிற்கு பொறுப்பு மிக்க அமைச்சர்களால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களும் நடைமுறையில் உதாசீனப்படுத்தப் படுவதைக் காணலாம். ஏன் அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் தொண்டமானிற்கு இது குறித்து வழங்கிய உத்தரவாதமும்கூட செல்லாக்காசாகப் போய்விட்டது.

பெண்களைக் கைது செய்யும்போது பெண் பொலிஸார் உடனிருக்க வேண்டும், கைது செய்யப்பட்டவர்கள் குற்றவாளிகளுடன் அடைக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும், சரியான சான்றிதழைக் காண்பிப்பவர்கள் கைது செய்யப்படக்கூடாது, என்பனவெல்லாம் இவற்றை மேற்கொள்பவர்களால் கருத்திற்கு எடுக்கப்படுவதாகவே தெரியவில்லை. இப்படியானால் இந்த உத்தரவாதங்களை ஏன் இவர்கள் வழங்குகிறார்கள்? வெளிநாடுகளிற்கான ஒரு கண்துடைப்பாக மட்டுமா? சட்ட நடவடிக்கைகளிற்குப் போகும்போது இவ் உத்தரவாதங்கள் சட்டப் பிரகாரம் வாதிடக்கூடிய அடிப்படைகள் அல்ல, அவற்றிற்கும் சட்டத்திற்கும் சம்பந்தமில்லை என்று சட்டத்தரணிகள் கூறுகிறார்கள்.

இவற்றை விட கைது செய்யப்படுபவர்கள் தமது உறவினருக்கு, அலுவலகத்திற்கு, அல்லது வழக்கறிஞருக்கு தொடர்புகொள்ள விடப்படுகிறார்களில்லை. இந்நிலையில் அவர்களுக்காக பிணை எடுக்க ஒருவர் நீதிமன்றம் வராவிட்டால் அவர்கள் நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்படவேண்டி நேரிடும். அவர்களது வாக்குமூலங்கள் தமிழ் நன்றாகப் புரியாதவர்களால் சிங்களத்தில் பதியப்படுகின்றன. அதில் என்ன எழுதி இருக்கின்றதென்று தெரியாமலே அவர்கள் கையொப்பமிட வேண்டியவர்களாகிறார்கள்.

இது ஓர் அடிப்படை மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சனை. முதலில் இவ்வாறு ஒருவர், அல்லது ஒரு தொகையானவர்கள் என்ன குற்றத்திற்காக என்று கூறப்படாமல் திடீரெனக் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, கைரேகை அடையாளங்கள், வாக்குமூலங்கள், படங்கள் ஆகியவை எடுக்கப்படுவது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் இல்லையா? நீதிமன்றம் ஒருவருக்கு பிணை கொடுப்பதென்றால் குற்றவாளியென்று கருதக்கூடிய ஒருவருக்கல்லவா பிணை கொடுக்கமுடியும்? குற்றமற்றவருக்கு ஏது பிணை? இலங்கை நாட்டின் சட்டங்கள் இவற்றை அடிப்படை உரிமைகளை மீறும் செயல்கள் அல்ல என்று காத்து நிற்குமேயானால் அது கூறும் செய்தி என்னவென்றால், குற்றமற்ற ஒரு மனிதன் அல்லது ஒரு தொகை மனிதர்கள் இவ்வளவு வேதனைகளுக்கும் எந்த மறுப்புமின்றி உட்பட்டுப் போவதுகூட இங்கு அவர்களது அடிப்படை உரிமைகள் என்பதையே.

து. பாஸ்கரன்
பிரதம ஆசிரியர்
அருவி

## கொழும்பில் தமிழர்கள் கண்டபடி கைதாவதைத் தடுக்க ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சர் தொண்டமானின் யோசனைகள்.

× தமிழர் என்ற வெறுமையான காரணத்திற்காக சந்தேகத்திற்கான முகாந்திரம் இன்றி நபர் எவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படக்கூடாது. சில அமைப்புகளின் அறிக்கைகள்

www.padippakam.com

அல்லது சந்தேகத்திற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பேரில் இதனை மேற்கொள்ளலாம்.

× சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் நபர்களைப் பொதுவான குற்றவாளிகளுடன் சேர்த்து அடைத்து வைக்கக்கூடாது. அவர்களைக் கௌரவமாக நடத்த வேண்டும். தடுப்பு அறைக்கு வெளியே தங்க அனுமதிக்க வேண்டும்.

× சோதனையின்போது நபர் ஒருவர் தனது வசிப்பிடத்தை ருசுப்படுத்தினால் அவரைக் கைது செய்யக்கூடாது. இதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1. தேசிய அடையாள அட்டை
2. பாஸ்போர்ட்
3. பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துகொண்ட படிவத்தின் பிரதி
4. வாக்காளர் அட்டையின் பிரதி அல்லது வாக்காளர் பட்டியலில் பெயரை ஊர்ஜிதம் செய்யும் தேர்தல் அலுவலக அத்தாட்சிப்பத்திரம்.
5. நபரை வதிவாளர் என்று வீட்டுச் சொந்தக்காரர் அல்லது சமூக அபிவிருத்தி சங்கத்தின் அத்தாட்சி.

× கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் எந்த நபராவது தனது தொழிலை பின்வருவனவற்றின் ஒன்றின்மூலம் ருசுப்படுத்தினால் அவரைக் கைது செய்யக்கூடாது.

1. ஊழியருக்கான வேலை கொள்வோரின் வவுச்சர்.
2. தொழில் நிறுவன அடையாள அட்டை.

× பெண்களை இரவில் கைது செய்யக்கூடாது. பெண்களை பொதுவாக இரவு பூராவும் பொலிஸ் நிலையத்தில் வைத்திருக்கக் கூடாது.

× மேற்போந்த வழிகாட்டல்களுக்கு அப்பாற்பட்டவர்கள் கைதாகும்போது அவசியமான பாதுகாப்பு அமைப்புகள் ஊடாக அவர்களின் அடையாளத்தை சரிபார்த்து பின்னர் அவர்கள் தேவைப்படாதவர்களாக இருந்தால் அவர்களை 24 மணி நேரத்திற்குள் விடுதலை செய்யவேண்டும்.

× மேற்கண்ட வழிகாட்டல்களுக்கு ஏற்ப தீர்க்கப்படாத பிரச்சினைகள் உரிய பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் விடப்பட வேண்டும்.

இந்த இணக்கப்பாட்டுக்குப் போதிய விளம்பரம் அளிக்கப்பட வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் அல்லது பொலிஸின் சிரேஷ்ட அதிகாரிகளினால் இதனைப் பத்திரிகைகளுக்கு அறிவிக்க வேண்டும்.

பொலிஸும் அதன் ஆளணியும் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளும் இதனைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

*(வீரகேசரி— 30.06.1993.)*



படிப்பகம்

படிப்பகம்

Printed Matter




FROM:

ARUVI
P. O. BOX 1354
COLOMBO-1
Sri Lanka.

03/08/93
66

To: "SANCHEEVI"
Danmarks Gade 10,
7500 Holsterbro,
DENMARK.

www.padippakam.com